**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC No.118/2025 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.6 |
| பெயர் | நாகராஜன் | கிராமம் | |
| தந்தை பெயர் | கிருஷ்ணன் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Krishnan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 19.05.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி மார்க்கெட்டில் கிருஷ்ணா பிளாஸ்டிக் கடை வைத்து நடத்தி வருகிறேன். எங்கள் கடைக்கு 4 கடைகள் தள்ளி உள்ள முத்துக்குமார் பெயிண்ட் கடையில் கட்டிடத்தை இடித்து வேலை பார்த்து கொண்டிருந்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் கடையை பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். அவர்களிடம் கட்டிட இடிபாடு ஒரு பெண் மீது மண் விழுந்து ஒருவாரம் கழித்து இறந்துபோனதாக கேள்விபட்டேன் என்று சொன்னேன்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தபோது கடந்த 12.02.2023 தேதியில் மதியம் 3.10 மணியளவில் என் கடைக்கு பக்கத்தில் இருக்கும் முத்துக்குமார் அன் கோ பெயிண்ட்டிங் கம்பெனியில் பழைய கட்டிடம் ஒன்றை இடித்து அப்புறப்படுத்தி கொண்டிருந்தார்கள் என்றும் அவ்வாறு கட்டிடத்தை இடித்து அப்புறபபடுத்தும் வேலையை கான்ட்ராக்டர் செய்து கொண்டிருந்தார்கள் என்றும் அவர்தான் ஆட்களை கூப்பிட்டு வந்து வேலை பார்த்துக்கொண்டிருந்தர் என்றும், ஆட்களை கூப்பிட்டு வர புகழேந்தி என்பவரை நியமித்து அவர்மூலம் கிருஷ்ணன் மனைவி கோவிந்தம்மாள் மற்றும் பாக்கியம் ஆகியோர்களை கட்டிடத்தில் வேலை பார்க்க விட்டிருந்தார்கள் என்றும் கோவிந்தம்மாள் வேலை செய்து கொண்டிருந்தபோது சிமெண்ட்டால் ஆன காண்கிரிட் தூண் அவர் தலையில் விழுந்து அவருக்கு காயம் ஏற்பட்டது என்றும் உடனடியாக அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும் இடிந்த கட்டிடத்தை பாதுகாப்பாக அகற்றாமல் கான்ட்ராக்டர் செய்த செயல்களால் கோவிந்தம்மாள் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. கட்டிடத்தின் உரிமையாளர் எனது கடைக்கு பக்கத்து கடையை சேர்ந்தவர் என்பதால் எனக்கு நல்ல பழக்கம் என்பதாலும் அவரை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– நாகராஜன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.